Int. J. Adv. Multidiscip. Res. (2017). 4(8): 124-127

International Journal of Advanced Multidisciplinary Research
ISSN: 2393-8870
www.ijarm.com
DOI: 10.22192/ijamr Volume 4, Issue 8 -2017

ஆய்வுக்கட்டுரை

DOI: http://dx.doi.org/10.22192/ijamr.2017.04.08.008

# பழமொழி நானூறு வெளிப்படுத்தும் நிலையாமை

முனைவர் இல. மாதரசி
உதவிப் பேராசிரியர் தமிழ்த்துறை,
பாரதிதாசன் அரசினர் மகளிர் கல்லூரி – புதுச்சேரி 03

முக்கிய சொற்கள்

இருமுது மக்கள் - தாய் தந்தையர்
வேய் - மூங்கில்
தெங்கம்பழம் - முற்றிய தேங்காய்
நீத்த – பந்த பாசம் நீங்கிய

ஆய்வுச் சுருக்கம்

பன்னெடுங்காலமாக தமிழ் மக்களின் வாழ்வு வழக்கில் இருந்து வரும் பழமொழிகளுள் பல பல்வேறு கருத்துக்களைச் சூழலின் துணை கொண்டு புரிந்து கொள்ள ஏதுவாக அமைகின்றன. அதனடிப்படையில் பதினெண்கீழ்க்கணக்கு நூலான பழமொழி நானூறு எடுத்துரைக்கும் நிலையாமை பற்றிய கருத்தாக்கங்களை இக்கட்டுரை விளக்க முற்படுகின்றது.

## நிலையாமை

நிலையாமை என்ற சொல்லிற்கு “இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்ப்பெயரகராதி அநித்தியம், உறுதியின்மை என்றும்; தமிழ் சொற்களஞ்சியம் ஸ்திரமாயிராமை, உறுதியின்மை என்றும் பொருள் தருகின்றன.

எது நிலைக்கும் என்பதும் எது நிலைக்காமலிருக்கும் என்பது பற்றிய புரிதலைத் தருவதே நிலையாமை எனக் கொள்ளப்படவேண்டும். ஒரு பொருளை வாங்கும்போது நமது மனம் மகிழ்கின்றது. அப்பொருளின் பலஆண்டுப் பயன்பாட்டில் நம் மனது மகிழ்ச்சியைப் பெறுகிறது. அப்பொருளின் பயன்பாட்டில் சிறிது பிரச்னை வரும்போது அப்பொருள் குறித்த மகிழ்ச்சி மறைந்து அதன் மீது வெறுப்பு உண்டாகிவிடுகிறது. பின்னர் அப்பொருள் குப்பைக்குச் சென்று விடும். உயிர், உடம்பு, செல்வம், இளமை ஆகியவையும் அப்படித்தான். செல்வம் ஒருவரிடத்தில் இருந்து மற்றொருவரிடத்திற்குச் சென்றுவிடும். யாக்கையாகிய நமது உடம்பு சில காலம் உயிரின் துணை கொண்டு இருந்து பின் நோய்வாய்ப்பட்டு இறந்து விடும்.இளமையும் காலப்போக்கில் மறைந்து விடும். மறைந்து விடக்கூடிய இதனை மறையாதது நிலையானது எனத் தவறாகப் புரிந்து கொண்டு வாழும் வாழ்க்கையை மனிதர்களாகிய நாம் வாழ்ந்து வருகிறோம்.

ஆசையே அழிவுக்குக் காரணம் என புத்தர் அறிவுறுத்தினார். ஆனால் மனிதர்கள் பிற பொருட்களின் மீதும் தமது உறவுகளின் மீதும் அதீத நம்பிக்கை வைத்து அவர்களுக்காகச் செல்வத்தைச் சேர்த்து வைத்து வருகின்றனர். நம்மிடையே வாழும் குருவிகள், பறவைகள், விலங்குகள் ஆகியவை இயற்கையை மீறி வாழ்வது கிடையாது. ஆனால் மனிதர்களாகிய நாம்தான் ஆசையின் பேரில் அளவுக்கு அதிகமாக

செல்வத்தினைச் சேர்த்து வருகின்றோம். அதனால் என்ன பயன்? தான் சேர்த்து வைத்த சொத்துக்களையும் செல்வத்தையும் நாமே எல்லா காலமும் ஆண்டு அனுபவிக்க முடியுமா?என்றால் அது முடியாதல்லவா அதனை வலியுறுத்துவதே நிலையாமை ஆகும்.தொல்காப்பியம், புறநானூறு, மதுரைக்காஞ்சி, நம்பியகப்பொருள்,திருக்குறள், நாலடியார் உள்ளிட்ட நூல்கள் நிலையாமை குறித்து வலியுறுத்துகின்றன.

## பழமொழியில் நிலையாமை

கேள்விக்கு இனிதாகவும் அறிவுக்கு வளம் சேர்ப்பதாகவும் விளங்கும் அரிய வாக்குகளையே, “பழமொழிகள்“ என்கிறோம். நம் முன்னோர்களின் வாழ்விலே பூத்துக் காய்த்துக் கனிந்த அனுபவ வாக்குகளே பழமொழிகள். அந்த வாக்குகளை உளங்கொண்டு, நடத்தைகளை ஒழுங்குபடுத்திக் கொள்ளும் போது, அப்படிக் கொள்பவரின் வாழ்வு வளமாகின்றது. பழமொழிகளைக் கற்கும் போது, நினைவிற் கொள்ள வேண்டிய ஓர் உண்மை இதுவாகும். தமிழினத்தின் செம்மையான நல்வாழ்வுக்கு உதவும் அறிவொளி விளக்கங்களாகப் பழமொழிகள் அமைந்து விளங்குகின்றன. சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் ஞானத் தெளிவுரைகளாகவும் அவை சுடரிடுகின்றன. பழமொழியை“முதுமொழி” என்றும் கூறலாம். முதுமொழியின் இலக்கணத்தைத் தொல்காப்பியனார்,அக்காலத்திலேயே வரையறுத்துக் கூறியுள்ளார்.

ஒவ்வொரு பழமொழியை ஈற்றில் கொண்டு அமைந்துள்ள 400 பாடல்களை உடையது பழமொழி நானூறு. இந்நூல் பாண்டிய நாட்டில் வாழ்ந்த முன்றுரையறையனார் இயற்றியுள்ளார். ஒவ்வொரு வெண்பாவும் முதலிரண்டடியில் ஆசிரியர் கூறவிரும்பும் பொருளும், நான்காம் அடியில் ஒரு பழமொழியும்,மூன்றாமடியில் பெரும்பாலும் ஆடுஉ முன்னிலையும் சிறுபான்மை மகடூஉ முன்னிலையுமாகக் கொண்டு அமைகின்றது. யாக்கை நிலையாமை, செல்வ நிலையாமை, இளமை நிலையாமை குறித்து பழமொழி கூறியிருக்கின்றது.

## இளமை நிலையாமை

இல்வாழ்க்கை யானும் இலதானும் மேற்கொள்ளார்
நல்வாழ்க்கை போக நடுவுனின்(று) - எல்லாம்
ஒருதலையாச் சென்று துணியா தவரே
**“இருதலையும் காக்கழித் தார்”**[1]

“இருதலையும் காக் கழித்தார்“ என்பது பழமொழி

மனிதன் தனது வாழ்நாளை இல்லறம் மற்றும் துறவறம் ஆகிய இரண்டு வழியில் கழிக்கலாம். இல்லறத்தில் இருந்து துறவறத்திற்கும், துறவறத்திலிருந்து இல்லறத்திற்கும் மாறி மாறி வாழ்க்கை நடத்துவதால் இறுதிப் பயனை அடையமுடியாது. இவ்வாறு வாழும் மக்களை காவடியின் இரு பக்கத்திலுள்ள பொருள்களையும் நீக்கிவிட்டுத் தண்டினை மட்டுமே சுமந்து செல்பவர்களுக்குச் சமமானவர்களாகக் கொள்ளலாம். இப்பழமொழி இளமை நிலையாமை குறித்து விளக்குகிறது.

## யாக்கை நிலையாமை

இன்றி யமையா இருமுது மக்களைப்
பொன்றினமை கண்டும் பொருள்பொருளாக் கொள்பவோ
ஒன்றும் வகையான் அறம்செய்க
**“ஊர்ந்துருளின் குன்று வழியடுப்ப தில்”**[2]

“ஊர்ந்துருளின் குன்று வழியடுப்ப தில்“. இது பழமொழி

இருமுது குரவராகிய தாய் தந்தையர்களும் கூடத் தம்மை விட்டுப் போய்விட்டதனைக் கண்டும் இவ்வுலகத்து வாழ்வை நிலையான ஒரு பொருளாக அறிவுடையோர் கொள்ளமாட்டார்கள். மனிதன் தான் வாழும் காலத்தில் மற்றவர்களுக்குச் செய்ய வேண்டிய உதவிகளைச் செய்து வாழ வேண்டும். மரணம் என்பது அனைவருக்கும் நிச்சயமானது. எது செய்தாலும் இறப்பைத் தடுக்க முடியாது என்பதனை மலையின் மேல் உள்ள குன்றானது கீழே விழும் போது அதனைத் தடுத்து நிறுத்த முடியாது. அதுபோன்று மனிதனுக்கு ஏற்படும் இறப்பை யாராலும் தடுத்து நிறுத்த முடியாது என யாக்கை நிலையாமை வலியுறுத்தப்படுகின்றது.

தோற்றம் அரிதாய மக்கட் பிறப்பினால்
ஆற்றும் துணையும் அறஞ்செய்க! - மாற்றின்றி
**"அஞ்சும் பிணிமூப்(பு) அருங்கூற்(று) உடனியைந்து
துஞ்ச வருமே துயக்கு"**[3]

தோன்றுவதற்கு அருமை உடையதாகிய மக்கட் பிறப்பினைப் பெற்றுள்ளோம். அதனால், முடிந்த வகைகளிலே எல்லாம் தரும காரியங்களைச் செய்து வருக. கொஞ்சமும் மாற்றுவதற்கு இயலாதவண்ணம் அஞ்சப்படும் நோய், முதுமை, அருங்கூற்று ஆகியவை எல்லாம் ஒன்றாகச் சேர்ந்து இறக்கும்படியான நிலையிலே தருமம் செய்யலாமென்று ஒதுக்கி வைத்தல், அந்த வேளையிலே, தருமம் செய்ய இயலாதபடி அறிவு மயக்கமும் வந்து சேர்ந்து விடலாம் என யாக்கையின் நிலையாமை வலியுறுத்தப்பட்டுள்ளது.

தருமத்தை இளமையிலேயே செய்ய வேண்டும் பின்னர் பார்த்துக் கொள்ளலாமென்றால், அது முடியாதும் போகலாம். "அஞ்சும் பிணி, மூப்பு, அருங்கூற்று உடனியைந்து துஞ்ச வருமே துயக்கு" என்பது பழமொழி.

இம்மைக்கும் உம்மைக்கும் தம்மை உடைமை தலை (215), தன்னாசை அம்பாயுள் புக்கு விடும் (220), நீரற நீர்ச்சார்வு அறும் (271) ஆகிய பழமொழிகள் யாக்கை நிலையாமைக்குத் துணை செய்வனவாக உள்ளன.

## செல்வ நிலையாமை

வழங்கலும் துய்த்தலும் தேற்றாதான் பெற்ற
முழங்கும் முரசுடைச் செல்வம் - தழங்கருவி
வேய்முற்றி முத்துதிரும் வெற்ப! அதுவன்றோ
**"நாய் பெற்ற தெங்கம் பழம்"**[4]

முழக்கமிட்டு விழும் அருவிகளும், மூங்கில்கள் முற்ற அவற்றினின்றும் உதிரும் முத்துக்களும் ஆகிய வளமுடைய மலைநாடனே! தான் பெற்ற செல்வத்தை வறுமையுள்ளோருக்கு வழங்காமல் சேர்க்கும் செல்வத்தால், செல்வம் சேர்ப்பவனுக்கும் வறுமை உடையோர்க்கும் எந்தப்பயனும் கிடைக்காது. அளவிற்கு மிகுந்த செல்வத்தைச் சேமித்து வைக்காமல் வறுமையுள்ளோருக்கு வழங்குவதால் நன்மை ஏற்படும்.

கருமி (கஞ்சன்) ஒருவன் தான் பெற்ற செல்வத்தைத் தானும் அனுபவிக்காமல் பிறரும் அனுபவிக்கக் கொடுக்காமல் இருப்பதால் ஒரு பலனும் ஏற்படப்போவதில்லை என்பதை "நாய் பெற்ற தெங்கம் பழம்" என்னும் பழமொழி வாயிலாக செல்வம் அனைவருக்குமானது என வலியுறுத்தப்படுகிறது.

காப்பிகந்து ஓடிக் கழிபெருஞ் செல்வத்தைக்
கோப்பெரியான் கொள்ளக் கொடுத்திரா
தென்செய்வர்?
நீத்த பெரியார்க்கே யாயினும் "**மிக்கவை
மேவிற் பரிகாரம் இல்"**[5]

மிக்க செல்வத்தைக் கொண்ட அரசன் தன் நாட்டின் மீது பகையரசன் படையெடுத்து வென்று விட்டால் அரசனானவன் தனது செல்வத்தை இழந்து உயிர் பிழைத்துக் கொள்ளாமல் என்ன செய்வான்? இது அரசனுக்கு மட்டுமன்று; உலகப் பற்றற்ற பெரியோர்களும் அளவுக்கு மிகுதியாக செல்வத்தை வைத்திருந்தால் அவர்களுக்கு வரும் துன்பம் வந்துதான் தீரும். அதற்கு வேறு பரிகாரம் இல்லை என்பதை "மிக்கவை மேவிற் பரிகாரம் இல்" என்ற இப்பழமொழி வழியாக செல்வ நிலையாமை வலியுறுத்தப்பட்டுள்ளது.

காப்பாரிற் பார்ப்பா மிகும் (150), திருவினும் திட்பம் பெறும் (229), நாய்காணின் கற்காணா வாறு (257), நோற்றார்க்குச் சோற்றுள்ளும் வீழும் கறி (283), பைங்கரும்பு மென்றிருந்து பாகு செயல் (330) ஆகிய பழமொழிகள் செல்வ நிலையாமை குறித்து விளக்குவதாக அமைந்துள்ளன.

## முடிவுரை

இக்காலத்தில் வாழும் மக்கள் தனது அன்றாட வாழ்க்கையை மிக வேகமாக கடந்து வருகின்றனர். இறையருள் மற்றும் இலக்கிய வளம் என்பதை நாடாத இளைய சமுதாயம் சீர்கெட்டு வாழ உயர் தொழில்நுட்பக் கண்டுபிடிப்புகள் பேருதவி புரிகின்றன. வாசிப்பு என்பது மாணாக்கர்களிடத்தில் எரிச்சலை உண்டுபண்ணுகின்ற அளவிற்கு உள்ளது. எனவே நல்ல கருத்துகள் மாணவர்களுக்கும் மக்களுக்கும் எளிதில் செல்ல வேண்டுமென்றால் அதனை அவர்கள் ஆவலாகப் படிக்க ஆவண

செய்ய வேண்டும். காலங்காலமாக நிலையாமை குறித்த கருத்துக்களும் கருத்தாக்கங்களும் தன்னை மனித வாழ்வில் புதுப்பித்துக் கொண்டுள்ள நிலையில் அதனை மனித சமூகம் கண்டுகொள்ளாததன் விளைவே பல்வேறு பிரச்னைகளுக்கு மூலகாரணமாக அமைந்துவிடுகின்றது. ஆகவே இலக்கியக் கருத்துக்கள் மக்களிடையே எளிதில் பரவவைப்பது கற்றவர்களின் கடமையாக உள்ளது. இயற்கையோடு இணைந்த வாழ்வு மிக்க மகிழ்ச்சியானது என்பதும் அன்றைய வாழ்வை அக்கறையுடனும் அறத்துடனும் கடக்க முற்படுவார்கள்.

## அடிக்குறிப்புகள்

1. பழமொழி நானூறு, செய்யுள் எண் : 46
2. மேலது., செ. எண் : 92
3. மேலது., செ. எண் : 06
4. மேலது., செ. எண் : 260
5. மேலது., செ. எண் : 352

| Access this Article in Online | |
|---|---|
| | Website: www.ijarm.com |
| Quick Response Code | Subject: Tamil |
| DOI:10.22192/ijamr.2017.04.08.014 | |

How to cite this article:
முனைவர் இல. மாதரசி. (2017). பழமொழி நானூறு வெளிப்படுத்தும் நிலையாமை. Int. J. Adv. Multidiscip. Res. 4(8): 124-127.
DOI: http://dx.doi.org/10.22192/ijamr.2017.04.08.014